கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 04.02.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "R புரொகிராமிங்" பயிற்சி

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மாணவர்களுக்கு "R புரொகிராமிங்" என்ற பயிற்சியை பிப்ரவரி 01 மற்றும் 02, 2025 ஆகிய தேதிகளில் ஏற்பாடு செய்துள்ளனர். முனைவர். அ.ரவிராஜ், முதன்மையர், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கோயம்புத்தூர் தரவு பகுப்பாய்வு, தரவுகாட்சிப்படுத்தல் மற்றும் தரவுகையாளுதலில் R புரொகிராமிங்கின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். பயிற்சி பல்வேறு தொகுதிகளாக கட்டமைக்கப்பட்டுள்ளது, இது பங்கேற்பாளரின் ஆராய்ச்சித்தரவை பகுப்பாய்வு செய்வது, காட்சிப்படுத்தல் மற்றும் அறிக்கை எழுதுவதற்கும் உதவுகிறது. இந்தப் பயிற்சி புகழ்பெற்ற இதழ்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவதற்கான அடிப்படை திறன்களை உறுதிப்படுத்தி, ஆராய்ச்சியாளரின் தரவுபகுப்பாய்வு திறனை மேம்படுத்துகிறது. முனைவர்.பாடீல் சந்தோஷ் கணபதி, உதவிப் பேராசிரியர் (வேளாண் புள்ளியியல்), இயற்பியல் அறிவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை பயிற்சி மற்றும் தரவு விளக்கத்தில் பங்கேற்பாளர்களை வழிகாட்டினார். முனைவர். பாலாஜி கண்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர் (PS&IT) இந்த பயிற்சியை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்தி கொடுத்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**